**முதலாவது கூடுதல் உதவி அமர்வு நீதிமன்றம், விழுப்புரம்**

**S.C. No.39/2024**

**LW 3 (PW4)**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வீரப்பன் | தொழில் | |
| த/பெ | ராமசாமி | தேதி | 16.02.2026 |
| ஊர் | | வயது | |
| மாவட்டம்; | | | |

(16.02.2026) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டது. 3 முதல் 10, 12எதிரிகள் ஆஜர். 11ம் எதிரி ஆஜரில்லை பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்படுகிறது.

**முதல் விசாரணை**

**சத்தியமாக சொல்கிறேன்**

நான் சொரப்பூரைச் சேர்ந்தவர். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். எனக்கு இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது.போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத வேண்டி அனுமதி வேண்டப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

21.10.2004 ம் தேதி காலை 10.30 மணியளவில் சொரப்பூர் மதுரா என்ற ஊரில் தம்பு சீனுவாசன் நிலத்தில் 1வது எதிரி கட்டிவைத்திருந்த மடையை சுப்பராயலு என்பவர் திறந்துவிட்டதற்காக விரோதம் கொண்டு 1 முதல் 4 வரையிலான எதிரிகள் தம்பு சீனுவாசன் நிலத்தில் அத்துமீறி நுழைந்து 1

மற்றும் 2வது எதிரிகள் சுப்பராயன் என்பவரை பார்த்து அசிங்கமான வார்த்தைகளால் திட்டி 3 மற்றும் 4வது எதிரிகள் சுப்பராயலு என்பவரை அசிங்கமாக திட்டி கொலை மிரட்டல் விடுத்துள்ளனர் என்றும் அதை நேரில் பார்த்தேன் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்பொழுது அதனை மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> இல்லை.**

சாட்சி சொல்ல சொல்ல ஆஜர் எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தமிழில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து செய்யப்பட்டது.

(Sd/-M.S. Varalakshmi)

முதலாவது கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
விழுப்புரம்